## மார்ச் – 26

**"நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்கள் அல்லவே. ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமலிருக்கக் கடவோம்." - 1தெச 5 : 5, 6.**

கிறிஸ்தவன் கர்த்தரின் ஒரு சீஷனாகவும், கிறிஸ்துவின் பள்ளியில் ஒரு மாணாக்கனாகவும், ஆயிர வருஷ ராஜ்யத்தில் ஒரு பதவிக்காக தகுதியாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறான். அதாவது, அதன் அதிசயமான ஆசிர்வாதங்களிலும் பலனிலும் (வெகுமதி) ஒரு பங்கைப் பெறுவதற்காக. ஆகையால் தேவனுடைய பிள்ளைகள் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக வேதாகமத்தில் அடிக்கடி கொடுக்கப்பட்டிருக்கிற கடிந்து கொள்ளுதலின் அவசியத்தைக் காண்கிறோம். தூங்குகிற அவர்களைக் குறித்தல்ல, சோம்பேறிகளாயிருக்கிற அவர்களைக் குறித்தல்ல, இவ்வுலகக் கவலைகளினால் பாரமடைந்திருக்கிற அவர்களைக் குறித்தல்ல, ஆனால் தேவனுடைய பிள்ளைகள் ஆவியில் அனலாயிருந்து கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று கடிந்து கொள்ளப்படுகிறார்கள். கர்த்தரின் சார்பாக அவர்களுடைய முதலாவது வேலை, சாத்தியமானவரை கர்த்தரின் சித்தத்துடன் மிகவும் நெருங்கிய இசைவுக்குள்ளும், தெய்வீக மாதிரிக்கு நெருங்கிய சாயலுக்குள்ளும் நம்மையே கொண்டு வருவது. இரண்டாவதாக, கற்பனையினாலும் மாதிரியினாலும் அதே நெருக்கமான வழியிலிருக்கும் அழைக்கப்பட்டிருக்கிற மற்றவர்களுக்கு உதவி செய்வது. **- Z ’03, 70 (R 3155).**

வேதாகமத்தின் அடையாளத்தில், இரவு பாவத்தைக் குறிக்கிறது. இருள் சாத்தானின் ஏமாற்றுதலுக்கடியில் பரிதாபமான உலக மக்கள் கிடைக்கும் வஞ்சகத்தைக் குறிக்கிறது. இந்த இரவின் மத்தியில், கர்த்தரின் ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. உலகத்தாரைப் போலல்லாமல், சிலர் நித்திரையை விட்டு எழுப்பப்பட்டிருக்கிறார்கள். அந்த ஒளியின் கதிர்களைப் பார்த்து, பின்தொடர்ந்து அவர்கள் நீதிக்குள்ளும் சத்தியத்துக்குள்ளும் நடத்தப்பட்டிருக்கிறார்கள். கர்த்தருடைய ஜனங்களான இவர்கள் இடைவிடாது ஒளியினண்டை விழிப்புள்ளவர்களாயிருந்து அதிலே நடக்கிறார்கள். **-P ’36, 31.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ரோம 13:11-13; எபே 5:8,11,14; கொலோ 1:12,13; 3:8; எபே 6:13-18; 1தெச 5:1-4,7,8; பிலி 4:8; ஏசா 9:2; மத் 25:5; 1யோவா 2:8; 1பேது 5:8,9.

**கோபுர வாசிப்பு : - Z ’13, 181 (R 5256).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் இந்த வசனம் எனக்கு என்ன அர்த்தமுள்ளதாயிருந்தது? ஏன்? அது எப்படி அவ்வாறாயிற்று? பலன் என்ன? அவற்றால் செய்யப்பட வேண்டியது என்ன?